ஈழமுரசு

EELAMURASU FORTNIGHTLY

நிறுவக ஆசிரியர் :
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்
கி.ஜெய்சந்தர்

ஏனைய பதிப்புகள்

பரிஸ்
லண்டன்
சுவிஸ்
ஜேர்மனி
கனடா

ஈழமுரசு
அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய பதிப்பின்
விளம்பர , விநியோகத்
தொடர்புகளுக்கு

நடுவப் பணியகம்
Head Office
Tel: (03) 8802 8368
Fax: (03) 9803 4932
Eelamurasu
P.O. Box 1327
Glen Waverley
Victoria 3150
Australia

eelamurasu@optushome.com.au

மலிவான விலையில்,
அழகுற உங்கள்
விளம்பரங்களை பிரசுரித்து
அதிக பயனடைய இன்றே
எம்முடன் தொடர்பு
கொள்ளுங்கள்

அடுத்த ஈழமுரசு
வெளியீடு
ஜனவரி மாதம் 21ம்
திகதி
உங்கள்
விளம்பரங்களை
ஜனவரி 19க்கு முன்
அனுப்பி வைக்கவும்

# மன்னார் - முகமாலை - மணலாறு மும்முனைகளிலும் முன்னேற கடும் முயற்சி - பேரிழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்குகிறது -

வன்னிப் பெரு நிலப்பரப்பை ஆக்கிரமி ப்பதற்கு கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக கடும் முயற்சிகளை எடுத்துவரும் சிறீலங்கா இராணுவம் பெரும் இழப்புக்களை சந்தித்து வருகின்றது. குறிப்பாக வவுனியாவில் மன்னார் களமுனைகள் ஊடாகவும், யாழில் இருந்து முகமாலை, கிளாலி, நாகர்கோவில் களமுனைகள் ஊடாகவும், கிழக்கில் மணலாற்றின் ஊடாகவும் இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆனால் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதல் காரணமாக எந்தவொரு களமுனை ஊடாகவும் அதனால் இது வரை முன்னேற முடியவில்லை. ஆனாலும், சிறீலங்கா இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் வவுனியா, யாழ் களமுனைகளுக்கு சென்று நிலைமைகளை ஆய்வு செய்து புதிய திட்டங்களை வகுத்துக்கொடுத்து வருகின்ற போதும், படையினரின் நகர்வுகள் தோல்விகளில் முடிவடைவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மன்னார்

மன்னாரில் கடந்த ஒரு வாரமாக மன்னாரின் பல முனைகளிலும் கடும் சமர்கள் இடம்பெற்று வருகின்றன. இறுதியாக நேற்று வியாழக்கிழமையும் கடுமையான சமர் இப்பகுதியில் இடம் பெ ற்றுள்ளது. மன்னார் மேற்கு பாலைக் குழி அணைக்கட்டுப் பகுதியில் அதி காலை 5.30 மணியளவில் படையினர் முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்டனர். ஆட்டிலெறிகள், மோட்டார்கள், பல்குழல்கள், மோர்ட்டார் எறிகணை, வெடிகணைகள் ஆகியனவற்றின் செறிவான சூட்டாதரவுடன் இம் முன்நகர்வு மேற்கொள்ளப்பட்டது.

இம் முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர முறியடிப்புத்தாக்குதலை நடத்தினர். முற்பகல் 11:00 மணிவரை சுமார் ஆறு மணி நேரம் நீடித்த முறியடிப்புத்தாக்குதலில் படைத்தரப்பு இழப்புக்களுடன் தமது நிலைகளுக்கு பின்வாங்கி ஓடினர். இம் முறியடிப்புத் தாக்குதலில் 10 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 15 படையினர் வரை காயமடைந்துள்ளனர். இம் மோதலில் விடுதலைப் புலிகளுக்கு எது வித இழப்புக்களும் ஏற்படவில்லை.

இதேவேளை, மன்னார் படையினருக்கு ஆதரவாக, வவுனியா பாலமோட்டைப் பகுதியில் சிறீலங்காப் படையி னர் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியும் விடுதலைப் புலிகளால் முறியடிக்க ப்பட்டுள்ளது. இதில் 3 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் காய மடைந்துள்ளனர். வியாழக்கிழமை மாலை 5.20 மணியளவில் பல்குழல் வெடிகணை மற்றும் ஆட்டிலெறி மோட் டார் எறிகணைச் சூட்டாதரவுடன் படையினர் முன்நகர்வு முயற்சியினை மேற்கொண்டனர். 40 நிமிட தாக்குதலில் விடுதலைப் புலிகள் படையினரை பழைய நிலைகளுக்கு விரட்டியடித்த னர். இத்தாக்குதலில் படையினரின் ஆயுத தளபாடங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. மன்னாரில் பரப்பான்கண்டல் பகுதியில் கட ந்த சனி, ஞாயிறு இரு தினங்களாக நடந்த கடும் சமரில் 20ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு, 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ள நிலையில், தற்போது தொடர்ந்தும் முன்னேற்ற முயற்சிகளை பல்வேறு வழிகளிலும் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, மன்னாரிலிருந்து மதவாச்சிய நோக்கி சென்றுக்கொண்டிருந்த இராணுவ பேருந்து ஒன்று செட்டிக்குளம் பகுதியில் வைத்து 31ம் திகதி திங்கள்கிழமை கிளைமோர் தா க்குதலுக்கு இலக்கானதில், அதில் பயணித்த மூன்று கடற்படையினர் உட்பட நான்கு படையினர் காயமடைந்துள்ளனர். இப்பகுதியினூடாக இராணுவத்தினரை ஏற்றி பேருந்துகள் செல்வது வழமையானதெனவும், இல க்கு தவறியதால் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை எனவும் செட்டிக்குளம் பொலிசார் தெரிவித்தனர். இதற்கிடையே, வவுனியா மேற்குப் பகுதியில் உள்ள கிடாச்சூரிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் புதிதாக உருவாக்கப்பட்ட 57வது படையணி யின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், மயிரிழையில் உயிர் தப்பியிருக் கின்றார் என்று கொழும்பிலி ருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

## மணலாறு

மணலாறு பகுதியூடாக படையினர் முன்னேற எடுத்துவரும் முயற்சிகளும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டு வருவதுடன், படையினரின் முன்னேற்ற மயற்சிகளைத் தடுக்கு விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல்களை நட த்தி வருகின்றனர். கடந்த வாரம் பதவியாவில் உள்ள யக்காபுர என்ற இடத்தில் சிறீலங்காப் படையினரின் பாரவூர்தி (ட்றக்) மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 3 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். படையினருக்கான விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்தப் பாரவூர்தி அனுராதபுரத்தில் இருந்து மணலாறு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகியது. இதேவேளை, மணலாற்றில் சிறீலங்காப் படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி 4 காவலரண்களை கைப்பற்றி, அதிலிருந்த படைக்கலங்களை கைப்பற்றியதன் பின்னர் அக்காவலரணை அழித்துள்ளனர். இதன் போது 3 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 2 பேர் காயமடைந்துள்ளனர். மணலாறு கொக்குத்தொடுவாயில் உள்ள படைக் காவலரண்கள் இரண்டும், சிலோன் தியேட்டர்ப் பகுதியில் உள்ள அத்தாவட்டுணுவெவ காவலரண்கள் இரண்டும் விடுதலைப் புலிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை தாக்கப்பட்டன.

இக்காவலரண்களுக்குள் நுழைந்து அதிரடித் தாக்குதலை நடத்திய விடுதலைப் புலிகள் படைத்தரப்பினருக்கு இழப்புக்களை ஏற்படுத்தினர். இத்தாக்குதலின் போது அரண்களிலிருந்து படையினர் இழப்புக்களுடன் பின்வாங்கி தப்பியோடியுள்ளனர். பின்னர் அந்த அரண்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றி சில மணிநேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அரண்களிலிருந்த படைக்கலங்கள் மற்றும் படைப்பொருட்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றி தமது நிலைகளுக்குத் திரும்பினர். இச்சம்பவத்தில் தமது தரப்பில் 3 படையினர் கெ?ல்லப்பட்டுள்ளதுடன் 2 பேர் காயமடைந்துள்ளதாக சிறீலங்காப் படைத்தரப்பு ஒத்துக்கொண்டது.

## யாழ்

யாழ். கிளாலி, முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்டு வரும் பெருமெடுப்பிலான முன்னகர்வுகளும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டு வருகின்றன. கிளாலிப் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆட்டிலெறிகள், மோட்டார்கள், பல்குழல்கள் ஆகியனவற்றின் செறிவான சூட்டாதரவுடன் விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி படையினர் தாக்குதலை நடத்தி முன்நகர முற்பட்டனர். முன்நகர முற்பட்ட படையினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடியான தீவிர முறியடிப்புத்தாக்குதலை நடத்தினர். சுமார் மூன்றரை மணிநேரம் நடைபெற்ற இத்தாக்குதலில் படைத்தரப்பினர் இழப்புக்களுடன் பின்வாங்கி தமது நிலைகளுக்கு ஓடிவிட்டனர். இதில் படைத்தரப்பில் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இம் முன்நகர்வு முறியடிக்கப்பட்டுக் கொண்டிருந்த அதேவேளையில் முகமாலைப் பகுதியில் மதியம் 12 மணியளவில் படையினர் செறிவான சூட்டாதரவுடன் பெருமெடுப்பில் முன்நகர்வுத் தாக்குதலை மேற்கொண்டனர். இதற்கு எதிராகவும் விடுதலைப் புலிகள் அதிரடியான முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர். இதிலும் படையினரின் முன்நகர்வு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டு, படையினர் அவர்களின் நிலைகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். இச்சம்பவத்தில் 2 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் பல படையினர் காயமடைந்தனர். இம் முறியடிப்புத் தாக்குதல்களில் விடுதலைப் புலிகளுக்கு எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை. இதேவேளை, யாழ். முகமாலை கண்டல் பகுதி ஊடாக ஊடுருவ முனைந்த படையினர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கியுள்ளனர். இதன்போது ஒரு படையினர் கொல்லப்பட்டதுடன், மேலும் நால்வர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பின்னர், அப்பகுதியில் விடுதலைப் புலிகள் தேடுதல் நடத்திய போது படையினரின் உபகரணங்களை கண்டெடுத்துள்ளனர். இதற்கிடையே, கிளாலி முன்னரங்க நிலையில் கொல்லப்பட்ட படையினரின் சடலத்தை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக படையினரிடம் கடந்த வாரம் கையளித்துள்ளனர்.

தவிர்க்க முடியாத காரணங்களினால்
**நகைச்சுவை இரவு 2008**
ஏப்ரல் மாதத்திற்கு தல்லிப்போடப்பட்டுள்ளது.
விபரங்கள் அடுத்த இதழில்

**PYRAMID VIDEO & SPICE**
114 The Crescent, Flemington NSW 2140
We sell Original Pyramid, Ayngaran, Tamilini DVDs, VCDs, Audio CDs
WE SELL DISCOUNT PHONE CARDS
WE SELL Indian, Srilankan, Asian Spices & Groceries
Tel: (02) 9764 4433 Fax: (02) 9764 4477 Mobile: 0412 486 573